வருவாய்த் துறை மற்றும் காப்பீட்டு நிறுவனம் இணைந்து ஆலோசனை வழங்கப்பட்டது.

திருவள்ளூர் பிர்க்கா ஈக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கான ஆலோசனை மையம் துவக்கி வைத்து, கடன் பெறும் விவசாயிகள், கடன் பெறாத விவசாயிகள் அனைவரையும் 30.10.2016க்குள் காப்பீட்டு பிரீமியம் தொகை செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள விவசாயிகளை கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பிரதம மந்திரி புதிய பயிர் காப்பீட்டுத் திட்டம் 2016 தொடர்பான துண்டு பிரசுரங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்தார். மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் அதிக அளவில் விவசாயிகள் முன்வந்து காப்பீட்டு பிரிமீயம் செலுத்தி இப்பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து கொண்டனர். பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து கொண்ட விவசாயிகளுக்கு கலெக்டர் சுந்தரவல்லி காப்பீட்டு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் ப.முருகவேல், துணை இயக்குநர் வி.எபினேசன், வருவாய் துறை அலுவலர்கள், மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் உடன் கலந்து கொண்டனர்.



திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் ரதவீதியில் உள்ள ஸ்ரீ அகோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்த நிகமாந்த மகாதேசிகர், ஸ்ரீமதா திவண் சடகோப யதீந்த்ர மகாதேசிகருக்கும் மகா உற்சவம் மற்றும் சாற்றுமுறை உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. பருத்திப்பட்டி தேவனார்விளாகம், வங்கீபுரத்தை சேர்ந்த டாக்டர் உ.வே. பத்மநாபாச்சார்யார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.


equitas

# எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முந்தைய பெயர், ''எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்'')

பதிவு அலுவலகம்: 410A, 4வதுமாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் II, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2

CIN: U65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

## செப்டம்பர் 30, 2016 வரை முடிவடைந்த மூன்று மாத மற்றும் அரையாண்டிற்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ லட்சத்தில்)

| வ. எண் | விபரங்கள் | தனிப்பட்ட முடிவுகள் | | | | ஒட்டு மொத்த முடிவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2016 | முடிவடைந்த அரையாண்டு 30 செப் 2016 | முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2016 | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2015 | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2016 | முடிவடைந்த அரையாண்டு 30 செப் 2016 | முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2016 | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2015 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயலாக்கங்களிலிருந்து மொத்த வருமானம் | 341.04 | 564.84 | 819.72 | 225.00 | 38,446.25 | 73,257.87 | 111,093.14 | 26,306.99 |
| 2 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முந்தையது, விலக்கானவை மற்றும் / அல்லது அசாதாரண வகைகள் | 205.21 | 268.00 | 384.06 | 111.67 | 8,476.75 | 18,110.81 | 26,011.96 | 6,173.42 |
| 3 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு பிந்தைய, விலக்கானவை மற்றும் / அல்லது அசாதாரண வகைகள் பிறகு | 205.21 | 268.00 | 384.06 | 111.67 | 7,369.43 | 17,003.49 | 26,011.96 | 6,173.42 |
| 4 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு பிறகு விலக்கானவை மற்றும் / அல்லது அசாதாரண வகைகள் பிறகு | 122.95 | 150.97 | 211.63 | 58.14 | 4,634.90 | 10,752.17 | 16,714.18 | 3,993.23 |
| 5 | சமபங்கு மூலதனம் | 33,695.61 | 33,695.61 | 26,992.04 | 26,934.37 | 33,695.61 | 33,695.61 | 26,992.04 | 26,934.37 |
| 6 | காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (முந்தைய ஆண்டின் இருப்பு நிலை அறிக்கையில் காண்பித்துள்ளபடி) | | | 69,158.54 | – | – | | 107,143.23 | |
| 7 | பங்கு ஒன்றுக்கான வருவாய் தொடர்ச்சி மற்றும் தொடரப்படாத செயலாக்கங்களுக்கான மூன்று மாத மற்றும் அரையாண்டு முடிவில் வருடத்திற்கு அல்லாத | | | | | | | | |
| (i) | அடிப்படை (₹) | 0.04 | 0.05 | 0.08 | 0.05 | 1.38 | 3.27 | 6.21 | 3.68 |
| (ii) | குறைமதிப்பு (₹) | 0.04 | 0.04 | 0.08 | 0.05 | 1.34 | 3.19 | 6.19 | 3.66 |

குறிப்பு: மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுபாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். காலாண்டு / அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com, www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

இடம் : சென்னை
தேதி : 21 அக்டோபர் 2016

இயக்குனர்கள் குழு சார்பாக
sd. S பாஸ்கர்
செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி


மக்கள் குரல் - 22/10/2016